07.03.2024

கூடுதல் மாவட்ட நீதிமன்றம் (விரைவு நீதிமன்றம்)

விழுப்புரம்

**EA.8/2022 in EP.26/2013 in ARC.1/2010**

**வா.சா.1**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | வள்ளி | | |
| க/பெ | தண்டபாணி உடையார் | | |
| கிராமம் | மிட்டாமண்டகபட்டு | தொழில் | |
| தாலுக்கா | விழுப்புரம் | வயது | 55 /2024 |
| மாவட்டம் | விழுப்புரம். | தேதி | |

இன்று சாட்சி உதவியாளர் அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.

**முதல் விசாரணை**

நான் வழக்கில் மனுதாரர் தரப்பு சாட்சி 1 ஆவேன். நிரூபணவாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன், நான் சொன்ன விபரம் அடிப்படையில் நிரூபணவாக்குமூலம் தயார் செய்யப்பட்டது. நான் படித்துப்பார்த்தேன் விபரம் சரியாக உள்ளது. கையொப்பம் போட்டேன்.

**1ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

**வெங்கடேசன்தான் என்னை சாட்சி சொல்ல கூப்பிட்டு வந்தார். என் வீட்டுகாரர் பத்திரத்தில் கையெழுத்து போட்டது சம்மந்தமாக சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். அது என்ன பத்திரம் என்று எனக்கு தெரியாது. நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த பிரமாண பத்திரத்தின் விவரங்களை நான் தான் வழக்கறிஞருக்கு சொன்னேன். மொட்டைய உடையார் சொன்னதை ஒருநபர் என் வீட்டின் திண்ணையில் எழுதினார். என் கணவர் அங்கு இருந்தார். எழுதிய நபர் யார் எந்த ஊரை சேர்ந்தவர் என்று எனக்கு தெரியாது. என்ன தேதி மாதம் தெரியாது 2009 ல் எழுதினார்கள். என்ன பத்திரம் எழுதினார்கள் என்று எனக்கு தெரியாது. எழுதிய பத்திரத்தில் தான் எனது வீட்டுகாரர் கையெழுத்து போட்டார். 3 மணிக்கு எனது வீட்டில் 3 பேர் வந்து கையெழுத்து போட்டார்கள். அதை தவிர**

வேறு எதுவும் இது குறித்து எனக்கு தெரியாது. 2009 ல் எழுதியதாகதான் நான் பிரமாணவாக்குமூலத்திற்காக எனது வழக்கறிஞரிடம் சொன்னேனே தவிர தேதி மாதம் தெரியாது. எனக்கு என்னுடைய முதல் விசாரணை வாக்கு மூலத்தில் உள்ள சங்கதிகள் தெரியாது என்றும் இந்த வாக்குமூலமே வெங்கடேசன் வழக்கறிஞருக்கு சொல்லி தயார் செய்து அதில் நான் கையொப்பம் செய்தேன் என்றால் சரியல்ல. என் வீட்டுகாரர், மனுதாரர் வெங்கடேசன், 2ம் எதிர்மனுதாரர் வீரபத்திரன், ம.சா.2 பலசுப்பிரமணியன் ஆகிய அனைவரும் சேர்ந்து கொண்டு 1ம் எதிர்மனுதாரர் ஏலத்திற்கு கொண்டுவரும் சொத்தில் துர்லாபம் அடைய வேண்டும் என்ற நோக்கத்தில் ம.சா. ஆ 25 தயார்செய்யப்பட்டது என்றால் சரியல்ல. ம.சா. ஆ 25ல் உள்ள மொட்டைய உடையாரின் கையெழுத்து அவருடையது அல்ல என்று சொன்னால் சரியல்ல. நான் வெங்கடேசனுக்கு அனுசரணையாக பொய்சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.